[5th September 1959

எடுத்துக்கொண்ட பிற்பாடு அங்கு இருக்கும்படியான உத்தியோகஸ்தர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் கொடுக்கும் சலுகைகளை இன்னும் கொடுக்காததற்கு என்ன காரணம் ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த ஆஸ்பத்திரியை அரசாங்கம் 31—3—1958-ல் எடுத்துக் கொண்டது. அந்த ஆஸ்பத்திரியில் இருப்பவர்களை கவர்ன்மெண்ட் சர்வீஸில் சேர்கிறீர்களா அல்லது கார்ப்பொரேஷனில் இருக்கிறீர்களா என்று கேட்டபோது அவர்கள் கார்ப்பொரேஷனில் இருக்கிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் மொத்தம் 25 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை உடனடியாக கார்ப்பொரேஷனில் எடுத்துக்கொள்ள முடியவில்லை. இப்போது இவர்களுக்கு இருக்கிற ஸ்கேல் பிரகாரம் கார்ப்பொரேஷனில் இதற்கு ஈக்விவலெண்ட் உத்தியோகம் இல்லை. இருந்தாலும் 30—9—1959-க்குள் அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறது.

Plantation Workers' bonus dispute

*162 *Q.*—SRI N. K. PALANISAMI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

1957-58ம் ஆண்டில் மலைத் தோட்டத் தொழிலாளர்களின் போனஸ் தகராறைத் தீர்க்க அரசாங்கத்தார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government constituted a Tripartite Committee to evolve a formula for settlement of bonus disputes in the Plantations in the State. As a result of a series of meetings of the Bonus Committee, the issue of payment of bonus for the years 1957 and 1958 has been amicably settled.

SRI N. K. PALANISAMI : May I know the details of the settlement?

THE HON. SRI R. VENKATARAMAN : 1957, 1958 ஆகிய இரண்டு வருடங்களுக்கும் மொத்தத்தில் 7½ சத விதம் போனஸாகக் கொடுப்பதாக ஒத்துக்கொண்டார்கள். இடைக்காலமாகக் கொடுத்ததைக் கழித்து பாக்கியைக் கொடுக்க ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

SRI J. MATHA GOWDER : 1957, 1958-ம் ஆண்டுகளுக்கு தோட்டத் தொழிலாளர்கள் விஷயத்தில் போனஸ் சம்பந்தமாக அக்ரிமெண்ட் ஆகும் போது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் அதில் இருந்தார்களல்லவா ?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் பழனிசாமி இல்லாமல் இருந்திருக்கலாம். கட்சித் தலைவர்கள் இருந்தார்கள் என்பதற்காக கேள்வி கேட்காமல் இருக்க முடியுமா ?

Madras City Slum Clearance Scheme

*163 *Q.*—SRI M. P. SARATHI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the estimated cost of Madras City Slum-clearance Scheme; and

(*b*) the loan and grant sanctioned by the Government for this Scheme in 1957, 1958 and 1959?